**தலைப்பு 116 – வர்த்தக அமைச்சு**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வர்த்தக அமைச்சின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் வர்த்தக அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 யூலை 08 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 ஆகஸ்ட் 13 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வர்த்தக அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அமைச்சு மீளாய்வாண்டின் போது ஸ்தாபிக்கப்பட்டிருந்தமையினால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிச் செயலாற்றல் கூற்று

#### (அ) மீண்டெழும் செலவினம்.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | அமைச்சிற்கு ஒன்றிணைக்கப்பட்ட ஏனைய அமைச்சின் கீழ் சாட்டப்பட்ட ரூபா 2,840,611 தொகை கணக்குகளில் சீராக்கப்பட்டிருந்த முறை தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படவில்லை. | செலவின தலைப்பு 55 இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட ரூபா 1,872,756 தொகையான சம்பளம் மற்றும் வேதன செலவினங்கள் மற்றும் ரூபா 774,200 தொகையான ஏனைய படிகள் செலவின தலைப்பு 151 (கடற்றொழில் அமைச்சு) இன் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. பின்னர் 6/2020 பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் இந்த செலவினம் செலவின தலைப்பு 116 இல் உள்ளடக்கப்பட வேண்டியிருந்தது. அதன் பிரகாரம் செலவின தலைப்பு 116 இன் கீழ் கொண்டுவரப்பட்ட மொத்த சம்பளம் மற்றும் வேதன | ஏனைய அமைச்சின் கீழ் சாட்டப்பட்ட செலவினங்கள் உரிய கணக்குகளில் சீராக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | செலவினங்கள் ரூபா 32,589,956 ஆக இருந்ததுடன் மொத்த ஏனைய படிகளின் செலவினம் ரூபா 774,200 ஆகும். மேலதிக நேரம் மற்றும் விடுமுறை தின சம்பளம் ரூபா 3,332,934 தொகை, வாடகை மற்றும் உள்ளூராட்சி வரி செலவினங்கள் ரூபா 13,930,877 ஆக சரியாக இருக்க வேண்டியதை ஏற்றுக்கொள்கின்றோம். | |
| (ii) | 151-1-1-0-1101-11 ஆம் இலக்க செலவின விடயத்தின் கீழ் 116-1-1-0-1101-11 ஆம் இலக்க செலவின விடயத்திற்கு மாற்றப்பட்ட ரூபா 120,750 தொகையான பிரயாண செலவினத்தில் மீள செலுத்துதல் 116-1-1-0-1101-11 ஆம் இலக்க செலவின விடயத்திற்கு செலவு வைப்பதற்கு பதிலாக வரவு வைத்ததன் தவறையும் சரி செய்தல் முறையாக மேற்கொள்ளப்படாமையின் காரணமாக மீளாய்வாண்டின் பிரயாணச் செலவினம் ரூபா 120,750 தொகை அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2020 திசெம்பர் கணக்குகள் பொழிப்பின் பிரகாரம் இந்த பிரயாணச் செலவான ரூபா 120,750 தொகை 116-1-1-1101 ஆம் இலக்க செலவின விடயத்தில் செலவு வைக்கப்பட்டுள்ளது. | தவறை சரிசெய்வதற்காக 116-1-1-0-1101-11 செலவின விடயத்தில் ரூபா 241,500 செலவு வைக்கப்பட வேண்டும். |

## 1.6.2 நிதி நிலைமைக் கூற்று

---------------------------------------

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திறைசேரி கணனி அச்சிடல் SA 80 இன் பிரகாரம் ஏனைய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் கீழ் ஆரம்ப மீதி காணப்படாத போதிலும் நிதிக்கூற்றுக்களில் ACA 6 இன் நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் ஏனைய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் கீழ் ரூபா 3,400,978 தொகை ஆரம்ப மீதியொன்று காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்பு சரியானது என ஏற்றுக்கொள்கின்றோம். இந்த ரூபா 3,400,978 தொகையான சொத்துக்கள் 2020 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களாகும். | கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் நிதிக் கூற்றுக்களில் சரியாக காண்பிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | ரூபா 41,000,000 கிரயமான மூன்று வாகனங்கள் தொடர்பான தகவல்கள் நிதிக்கூற்றில் ACA- 6 இல் அல்லது திறைசேரி கணனி அச்சிடல் SA 81 இன் கீழ் காண்பிக்கப்பட்டிருக்க வில்லை. | இந்த பெறுமதி சொத்தாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | சகல சொத்துக்களும் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

## 1.6.3 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணிச் செல்லப்படாமை

அமைச்சினால் கீழே காண்பிக்கப்படுகின்ற சில பதிவேடுகள் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கணக்காய்வு ஐயவினா பதிவேடு | | |
| | நிதிப்பிரமாணம் 452(1) இன் பிரகாரம் கணக்காய்வு ஐயவினா பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். நாளது வரையாக்கப்படுகின்றது. | 452(1) இன் பிரகாரம் கணக்காய்வு ஐயவினா பதிவேடு பேணிச்செல்லப்பட வேண்டும். |
| (ஆ) | இழப்பு தொடர்பான பதிவேடு | | |
| | நிதிப் பிரமாணம் 110 இன் பிரகாரம் இழப்பு தொடர்பான பதிவேடொன்று பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | நிதிப்பிரமாணம் 110 ஏற்பாடுகளின் பிரகாரம் அதன் கீழ் வருகின்ற மாதிரி படிவத்தின் படி இழப்பு தொடர்பான பதிவேடு பேணிச்செல்லப்பட வேண்டும். |
| (இ) | பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு | | |
| | நிதி பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | நிதிப்பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்புகளை தினந்தோறும் பரிட்சிக்கக் கூடிய வகையில் பொறுப்பு பதிவேட்டில் அந்த பொறுப்புக்கள் பதியப்பட வேண்டும். |

## 1.6.4 கணக்காய்வு சான்றுகள் இன்மை

-----------------------------------------------------

கீழே குறிப்பிடப்படுகின்ற கொடுக்கல் வாங்கல் தொடர்பாக கணக்காய்வு சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அமைச்சிற்கு மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட 03 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு 2021 மே 31 ஆம் திகதி வரையிலும் பதிலளிக்கப்படாதிருந்ததுடன் அந்த ஐய வினாக்களுக்குரிய கணிப்பிடக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 4,106,802,713 ஆகும். | பதிலளிக்கப்பட வில்லை. | நிதி பிரமாணம் 155 இன் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்/ கணக்கீட்டு உத்தியோகத்தரினால் நிதி பிரமணம் 452(1) இல் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு ஐயவினா பதிவேடு குறித்த காலத்தின் பின்னர் பரீட்சிக்கப்பட்டு கிடைக்கப்பெற்ற கணக்காய்வு ஐயவினாக்களில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டியிருந்ததுடன், அந்த ஐய வினாக்களுக்கு உடனடியாக பதில் அளிக்கப்பட வேண்டும். அவ்வாறு பதிலளிப்பதில் தாமதம் ஏற்படுமாயின் ஐயவினாக்களுக்காக இடைக்கால அறிக்கையொன்றை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) 2020 சனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களுக்குரிய மாதாந்த கணக்கு பொழிப்புக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். நாளது வரையாகப்படுகின்றது. | மாதாந்த கணக்கு பொழிப்புக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ) கட்டுநிதி சீராக்கல் கணக்கில் வரவு பதிவாக காண்பிக்கப்பட்ட ரூபா 6,111,379 தொகை தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | இது தொடர்பாக தேவையான விளக்கமளித்தல்கள் மிகவிரைவில் உங்களுக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தயவுடன் அறியத்தருகின்றோம். | வரவு பதிவு தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 செலவின முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 12 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 5,830,000 தொகையான மொத்த தேறிய நிதி ஏற்பாடும் சேமிக்கபட்டிருந்தது. | இந்த அமைச்சு 2020 செப்டம்பர் முதல் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதற்கு முன்னர் காணப்பட்ட செலவின தலைப்பு இலக்கம் 53 பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் பொது வழங்கல் அமைச்சரவை அல்லாத அமைச்சு கலைக்கப்பட்டு அந்த அமைச்சின் கீழ் காணப்பட்ட செலவினங்கள் இந்த அமைச்சிற்கு கொண்டுவர பட்டிருந்தது. உள்ளபடியாக இந்த அமைச்சிற்கு ( செலவின தலைப்பு 116) 2020 செப்டம்பர் முதல் திசெம்பர் வரை மாத்திரமே நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அந்த நிதிஏற்பாட்டில் | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் சரியான செலவின மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ஆகக்கூடியதாக பயன்படுத்தப்பட்டிருந்தது டன் ஒதுக்கப்பட்ட மொத்த நிதிஏற்பாட்டை செலவிடுவதற்கு போதியளவான கட்டுநிதி கிடைக்காமையால் முடியாதிருந்தமை, கொரோனா தொற்றுநோய் காரணமாக நிறைவேற்ற வேண்டிய வேலை நடவடிக்கைகள் பாதிப்படைந்தமை போன்ற விடயங்கள் காரணமாக இருந்தன. | |
| (ஆ) | 53 செலவின விடயங்களுக்கு 678,908,109 தொகையான மிகை நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதிஏற்பாட்டை பயன்படுத்திய பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதிஏற்பாட்டில் 12 வீதம் முதல் 99 வீதத்திற்கு இடையிலான வீச்சினை கொண்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | அமைச்சிற்குரிய செலவின தலைப்பின் கீழ் நிகழ்ச்சித்திட்டம் 01 இல் 05 செலவின விடயங்களுக்காக ரூபா 7,230,000 தொகையும், 02 நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் செலவின விடயம் ஒன்றிற்காக ரூபா 31,000,000 தொகையும் ஆக கூட்டுமொத்தமாக ரூபா 38,230,000 தொகை வீரமன் நடைமுறையின் கீழ் மேலதிக நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. அது ஒவ்வொரு செலவின விடயத்தின் மதிப்பீட்டு நிதி ஏற்பாட்டில் 60 வீதம் முதல் 700 வீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | நிகழ்ச்சித்திட்டம் 01 இல் 05 செலவின விடயங்களுக்காக ரூபா 4,980,000 தொகையும், நிகழ்ச்சித்திட்டம் 02 இல் செலவின விடயம் ஒன்றுக்காக ரூபா 31,000,000 தொகையும் ஆக ரூ 35,980,000 தொகை வீரமன் நடைமுறையின் கீழ் நிதிஏற்பாடு குறைக்கப்பட்டு இருந்தது. அது ஒவ்வொரு செலவின விடயத்தினதும் மதிப்பீட்டு நிதிஏற்பாட்டில் 28 வீதம் முதல் 100 வீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது. | இந்த அமைச்சு புதிய அமைச்சாக இருந்தமையினால் அமைச்சுக்குத் தேவையான கொள்வனவுகள் மற்றும் அரச செயற்திட்டங்களை விரைவாக பூர்த்தி செய்வதற்காக வீரமன் நடைமுறையின் கீழ் மேலதிக நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- |

## 2.2 எல்லையினை விஞ்சியமை

---

அரசாங்கத்தின் முற்பண பணிகளுக்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லையினை விஞ்சியமை மற்றும் அடையாதிருந்தமை தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அமைச்சின் 2020 ஆம் ஆண்டின் அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணம் (பீ) கணக்கு தொடர்பாக ஒதுக்கீட்டு சட்டத்தில் அதிகாரம் கிடைக்கப்பெற்ற ஆகக் குறைந்த பெறுவனவு எல்லை 6,000,000 ஆக இருந்ததுடன் நிதிப்பிரமாணம் 503(1) கீழ் மேற்கொள்ளப்பட்ட சீராக்கங்கள் நீக்கப்பட்ட பின்னர் பணமாக உள்ளபடியான பெறுவனவுகள் ரூபா 3,061,083 ஆக இருந்தது. அதன் பிரகாரம் அமைச்சினால் ஒதுக்கீட்டு சட்டத்தில் அதிகாரம் வழங்கப்பட்ட ஆக குறைந்த பெறுவனவு எல்லை அடையப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். | அரசாங்க உத்தியோகத்தர்களின் (பீ) கணக்கு தொடர்பாக ஒதுக்கீட்டு சட்டத்தில் அதிகாரம் வழங்கப்பட்ட ஆகக் குறைந்த பெறுவனவு எல்லை அடையப்பட வேண்டும். |

## 2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்

பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்குரியதாக வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகள் கீழே குறிப்பிடப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) நிதிக்கூற்றில் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் இல்லாததாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 2021 ஆம் ஆண்டில் கொடுப்பனவு தொடர்பான தெரிவுப் பரிசோதனையின்போது 2020 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 4,416,559 கொடுப்பனவுகள் 2021 ஆம் ஆண்டு சனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களின் போது செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | 2021 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கின்ற சந்தர்ப்பத்தில் இந்த பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் உள்ளடக்கப்படும் என அறியத்தருகின்றோம். | கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகளை சரியாக இனங்கண்டு நிதிக்கூற்றில் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் காண்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) 116-1-2-1002 ஆம் இலக்க செலவின விடயத்தின் கீழ் சேமிப்பை விஞ்சிய பொறுப்புகள் 601,023 காணப்பட்டதுடன் இது தொடர்பாக நிதிப் பிரமாணம் 94 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் 94 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | சேமிப்பை விஞ்சிய பொறுப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 94 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

2.4 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்/கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்படவேண்டிய உறுதிப்படுத்தல்.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டுக்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்று பேணிச் செல்லப்படுவதை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும், கணக்கீட்டு உத்தியோகத்தரும் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அந்த முறைமையின் வெற்றித் தன்மை தொடர்பாக முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வினைச் செய்து அதன் பிரகாரம் முறைமையை ஆக்கபூர்வமாக ஆக்குவதற்கு தேவையான மாற்றங்களை செய்யவேண்டியிருந்தமையும், அந்த மீளாய்வு எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டமைக்கான கூற்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் பதில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தேவையான பிரகாரம் குறித்த காலஎல்லையில் சகல கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் பதிலளிக்கபட்டமையை பிரதான கணக்கிட்டு | பதிலளிக்கப்பட்டிருக்க வில்லை. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | உத்தியோகத்தர் மற்றும் கணக்கிட்டு உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், அறிக்கையின் 3.3 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | உள்ளக கணக்காய்வு இலக்குகளை சரியான பிரகாரம் அமுல்படுத்துவதற்காக ஆக்கபூர்வமான திட்ட முறைமையொன்று உள்ளமையை பிரதான கணக்கு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் அறிக்கையின் 4.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட அவதானிப்பின் பிரகாரம் அந்த தேவைகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |

**2.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வுசெய்து காண்பிக்கப்படுகின்றது.

| அவதானிப்புக்கள் | | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | | **இணங்காமைகள்** | | |
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | | |
| (அ) | நிதிப்பிரமாணம் 104(1), 104(3), 104(4) | 05 வாகன விபத்துக்கள் தொடர்பாக 07 தினங்களுக்குள் | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிப்பிரமாணம் 104 இன் 04 அறிக்கைகள் | வாகன விபத்து தொடர்பாக நிதிப்பிரமாணம் 104(1), 104(3) |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சமர்ப்பிக்க வேண்டிய ஆரம்ப பரிசோதனை அறிக்கை மற்றும் 03 மாதங்களில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய இறுதி பரிசோதனை அறிக்கை என்பன தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | தயாரிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் , ஏனைய விபத்துக்கள் தொடர்பான நடவடிக்கைகளுக்காக உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். | மற்றும் 104(4) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நிதிப் பிரமாணம் 395(இ) | ஒவ்வொரு மாதத்தின் இறுதியில் உள்ள கொடுக்கல் வாங்கல் நிலைமை தொடர்பாக அடுத்துவரும் மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் வங்கி இணக்கக் கூற்று தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அமைச்சினால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கவில்லை. | தற்போது இந்த அமைச்சு அடுத்து வரும் மாதத்தின் 15 திகதிக்கு முன்னர் வங்கி இணக்கக்கூற்று தயாரிக்கின்றது. | நிதிப் பிரமாணம் 395(இ) இன் பிரகாரம் ஒவ்வொரு மாதத்திலும் உள்ள கொடுக்கல் வாங்கல் நிலைமை தொடர்பாக அடுத்துவரும் மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் வங்கி இணக்கக்கூற்று தயாரிக்கப்பட வேண்டும். |

## 2.6 வைப்பு மீதிகள்

----------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2006 இன் 12 ஆம் இலக்க முத்திரை வரி சட்டத்தின் 7 ஆம் பிரிவின் பிரகாரம் சம்பளத்தில் இருந்து அறவிடப்படும் முத்திரைக் கட்டணம் ஒவ்வொரு காலாண்டும் முடிவடைந்து 15 நாட்களுக்குள் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட | உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் முத்திரை கட்டணத்திற்காக பதிவு செய்து அந்த முத்திரைக் கட்டணத்தை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்படும் என தயவுடன் அறியத்தருகின்றோம். | 2006 இன் 12 ஆம் இலக்க முத்திரை வரி சட்டத்தின் 7 ஆம் பிரிவின் பிரகாரம் சம்பளத்திலிருந்து அறவிப்பட்ட முத்திரைக் கட்டணம் ஒவ்வொரு காலாண்டும் முடிவடைந்து 15 நாட்களுக்குள் உள்நாட்டு இறைவரி |

| | | |
|---|---|---|
| வேண்டியிருந்த போதிலும் 2020 சனவரி முதல் திசெம்பர் வரை அமைச்சு அறவிட்டிருந்த ரூபா 24,725 தொகையான முத்திரைக் கட்டணம் 2021 மார்ச் 01 திகதி வரையிலும் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பப்படாமல் பொது வைப்பு கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. | | ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட வேண்டும். |
| (ஆ) அரசாங்க சேவை ஊழியர் சேமலாப நிதியத்திற்கு அனுப்பப்பட வேண்டிய ரூபா 235,360 தொகை மற்றும் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு அனுப்பப்பட வேண்டிய ரூபா 85,103 தொகை உரிய நிறுவனங்களுக்கு அனுப்பப்படாமல் பொது வைப்பு கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. | இந்த தொகையை விரைவாக அரசாங்க சேவை சேமலாப நிதியத்திற்கும் ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் அனுப்பப்படும் என அறியத்தருகின்றோம். | அரசாங்க சேவை சேமலாப நிதியத்திற்கும், ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் அனுப்பப்பட வேண்டிய பணம் தாமதமின்றி அனுப்பப்பட வேண்டும். |

## 2.7 வங்கிக் கணக்கு செயற்பாடுகள்

வங்கி கணக்கு செயற்பாடுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட குறைபாடுகள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| விநியோகிக்கப்பட்டிருந்த போதும் சமர்ப்பிக்கப்படாத ரூபா 1,862,716 தொகையான காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 396 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | விநியோகிக்கப்பட்ட போதும் கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் தொடர்பாக எதிர்காலத்தில் நிதிப்பிரமாணம் 396 இன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | விநியோகிக்கப்பட்டிருந்த போதும் கொடுப்பனவிற்கு சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 396 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

---

### 3.1 திட்டமிடல்

---

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2006 மார்ச் 24 ஆம் திகதிய பாதீட்டு சுற்றறிக்கை இலக்கம் 128 இன் பிரகாரம் வருடாந்த பெறுகைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவிலை. | வர்த்தக அமைச்சு 2020.08.09 ஆம் திகதிய விசேட வர்த்தமானியின் பிரகாரம் ஸ்தாபிக்கப்பட்டிருந்ததுடன் அதற்கு முன்னர் அமைச்சில் சில பகுதிகள் சேர்க்கப்பட்டு உள்ளக, வர்த்தக, உணவுப் பாதுகாப்பு மற்றும் நுகர்வோர் நலன்புரி அமைச்சு வர்த்தக அமைச்சாக நியமிக்கப்பட்டிருந்தது. உத்தியோகத்தர் பற்றாக்குறை மற்றும் அமைச்சிற்கு இடவசதிகள் வழங்குவதில் காணப்பட்ட கஷ்ட நிலைமையினால் பெறுகை திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. எனினும் 2021 ஆம் ஆண்டிற்கு பெறுகை திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. | 2006 மார்ச் 24 ஆம் திகதிய தேசிய பாதீட்டு சுற்றறிக்கை இலக்கம் 128 இன் பிரகாரம் வருடாந்த பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

---

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட 19 வாகனங்களின் உரித்து அமைச்சிற்கு கையயேற்கப்பட்டிருக்கவில்லை. | இந்த வாகனங்களை கையேற்பதற்காக தற்போது நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | அமைச்சு பயன்படுத்துகின்ற வாகனங்கள் அமைச்சிற்கு கையேற்கப்பட வேண்டும். |

**3.3 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிக்காமை.**

---

அமைச்சிற்கு விநியோகிக்கப்பட்ட 03 ஐய வினாக்களுக்காக 2021 ஆகஸ்ட் 31 ஆம் திகதி வரையிலும் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.

**4. நல்லாளுகை**

---

**4.1 உள்ளகக் கணக்காய்வு**

---

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| அமைச்சில் உள்ளக கணக்காய்வு அலகொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்க வில்லை. | அமைச்சின் உள்ளக கணக்காய்வு அலகை ஸ்தாபிப்பதற்குரிய பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் மற்றும் உள்ளக கணக்காய்வாளர் என்ற இரண்டு பதவிகளும் தற்போது வெற்றிடமாக காணப்பட்டதுடன், பதவியினை விரைவாக நிரப்புமாறு எழுத்துமூலம் அரச நிர்வாக அமைச்சு, அரசாங்க சேவைகள் ஆணைக்குழு, முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் என்பனவற்றிற்கு அறிவிக்கப்பட்டு மீள்நினைவூட்டலும் அனுப்பப்பட்டுள்ளது. இந்த நிலைமை தொடர்பாக அமைச்சரவைக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான காரணம் உத்தியோகத்தர் பற்றாக் குறையாக இருந்தமையை அறிய தருகின்றோம். | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 40 ஆம் பிரிவின் பிரகாரம் உள்ளக கணக்காய்வு அலகொன்று ஸ்தாபிக்கப்பட வேண்டும். |

**4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு**

---

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2016 சனவரி 28 ஆம் திகதிய டீளம்ஏ/CIR-EDIT/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தியின் பிரகாரம் 2020 | அமைச்சின் உள்ளக கணக்காய்வு அலகொன்றை ஸ்தாபிப்பதற்குரிய பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் மற்றும் உள்ளகக் கணக்காய்வாளர் என்ற இரண்டு பதவிகளும் | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் |

| | | |
|---|---|---|
| ஆம் ஆண்டிற்கான கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | வெற்றிடமாகக் காணப்படுகின்றமையால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டத்தினை நடாத்துவதற்கு முடியாத நிலைமை எழுந்திருந்தது. அவ்வாறே அந்த பிரிவிற்கு நியமிப்பதற்கு போதிய அனுபவமுள்ள உத்தியோகத்தர்கள் அமைச்சில் காணப்படாதிருந்தமையை அறியத்தருகின்றோம். | குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டும். |

**5. மனித வள முகாமைத்துவம்**

------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியிணியினர் 111 ஆக காணப்பட்டதுடன் அதில் 55 பதவிகள் அதாவது 50 சதவீதம் வெற்றிடமாக காணப்பட்டன. | தற்போது வெற்றிடங்கள் காணப்படுகின்ற பதவிகளை விரைவாக நிரப்புமாறு கோரி அரச நிர்வாக அமைச்சு, அரசாங்க சேவைகள் ஆணைக்குழு, முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் மற்றும் அமைச்சரவைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | தேவையினை கவனத்தில் கொண்டு அத்தியவசிய பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |